

இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று ஆவணக்குழு செய்தி மலர்

மலர்: 1 ஏப்ரல் 1989

மலர்ந்தது புதுமலர்

நமது மண்ணின் பெருமையையும் புகழையும் என்றென்றும் நின்று துலக்கும் விளக்கமாக அமைந்து இருப்பது வரலாறு. இதற்கு ஆதாரமான ஆவணங்கள், கல்வெட்டுக்கள், பட்டயங்கள், ஏடுகள், நாணயங்கள், பழம் பொருட்கள் முதலியன நமது நாட்டில் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்றன. அவைகளின் சிறப்பினை அறியாத மக்கள், அவைகளைப் பேணிக்காப்பதற்குப் பதிலாக, அவைகளின் அழிவிற்கு துணைநிற்கின்றனர். இந்த அவல நிலையினை அகற்றி, வரலாற்றுத் தடயங்கள், மக்களுக்குப் பயன்படும் நோக்கில், மாவட்டந்தோறும் வரலாற்று ஆவணக் குழுக்களை அரசினர் அமைத்து வருகின்றனர்.

1986ல் அமைக்கப்பட்ட நமது மாவட்டக் குழு, இதுவரை கி.பி. 1692ம் ஆண்டில் வரையப் பெற்ற செப்பேடு ஒன்றையும், கி.பி. 1881-92ம் ஆண்டு ஆவணங்கள் சிலவற்றையும் கண்டுபிடித்து அரசிடம் ஒப்படைத்துள்ளது. இத்தகைய ஆவணங்களை இனங்கண்டு சேகரிப்பதில், இந்தக் குழு தொடர்ந்து முனைந்துள்ளது. மேலும், மூன்று திங்களுக்கு ஒருமுறை, "செய்தி மலர்" ஒன்றை வெளியிடவும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அதன் வெளிப்பாடாக இந்த முதல் மலர், பழைமை மணம் பரப்பும் புதுமலராகப் பொலிகிறது.

வரலாற்று மணங்கமழும் வண்ணம், இந்த செய்தி மலரைச் சிறப்பாக வெளியிடுவதற்கான பொறுப்பினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டுள்ள, தமிழ்நாடு அரசு விருது பெற்ற நூலாசிரியர் டாக்டர். திரு. எஸ்.எம். கமால் அவர்களுக்கு நமது நன்றிக் கடப்பாட்டினை புலப்படுத்திக் கொள்கிறோம். மேலும், இந்த மலர் வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த நமது குழுத் தலைவரும் முன்னாள் மாவட்ட ஆட்சியருமான திரு. அஜய் பட்டாச்சார்யா, இ.ஆ.ப., அவர்களையும் நினைவில் கொள்கிறோம்.

அண்மையில் நமது மாவட்ட ஆட்சிப் பணியினை ஏற்றுள்ள திரு. அர. செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்களுக்கு, நமது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை நல்குவதுடன், அவர்களது சீரிய தலைமை, நமது குழு சிறந்த சாதனைகளைப் படைப்பதற்கு பல்லாற்றானும் பயனுடையதாக இருக்கும் என நம்புகிறோம்.

மற்றும், பொதுமக்களும், அமைப்புக்களும் இந்தக் குழுவின் இயக்கத்தில் பங்கு கொண்டு, வரலாற்று ஆவணங்களைச் சேகரித்துக் கொடுத்து, நமது மாவட்டத்தின் புதிய வரலாறு படைக்கும் பணியில் முழுமையாக ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாவட்ட வரலாற்று ஆவணக்குழு,
இராமநாதபுரம்.

வரலாறு திரும்புகிறது

இராமநாதபுரம் மாவட்டம் இராமகாதையின் இலக்கியத் தொடர்பும், வரலாற்றுத் தொன்மையும் கொண்டது. முல்லையும் மருதமும், பாலையும், நெய்தலும் ஆக திணை மயங்கிய நிலக்கூறுகளாக காட்சியளிக்கும், இந்த பரந்த நிலபரப்பு பாண்டியப் பேரரசின் கிழக்கு எல்லையாக விளங்கிய நீண்ட கடற்கரையைத் தொட்டும், வடக்கில் சோனாட்டு எல்லையைத் தொடர்ந்தும் சென்று மேற்கே மன்னார் வளைகுடாவில் முடிகிறது. இந்த எல்லைகள் நிலையானவையாக இருக்கவில்லை என்பதை வரலாறு உணர்த்துகிறது.

இந்தப்பகுதி பாண்டிய சோழப்பேரரசுகளின் ஆட்சியில் பாகனூர் கூற்றம், முத்தூர் கூற்றம், மிழலைக் கூற்றம், துகவூர் கூற்றம் என்ற பெரும் பிரிவுகளாகவும், மதுரோதய வளநாடு, மதுராந்தக வளநாடு, கேரளசிங்க வளநாடு, அதலையூர் வளநாடு, இராஜசிங்க வளநாடு, இராஜகம்பீர வளநாடு, வரகுண வளநாடு என்ற சிறு பிரிவுகளாகவும், வேம்பு நாடு, பருத்திக்குடி நாடு, வடதலைச்செம்பி நாடு, கீழ்ச்செம்பி நாடு, செவ்விருக்கை நாடு கைக்கி நாடு, பொலியூர் நாடு, புனல்பரளை நாடு, தென்னாலை நாடு, கானப்பேர் நாடு, தழையூர் நாடு, இடையள நாடு, களவழி நாடு, கல்வாசல் நாடு, கானாடு என்ற உட்பிரிவுகளாலும் வழங்கப் பட்டு வந்தது. தொடர்ந்து மதுரைச் சுல்தான்கள் விஜயநகர பேரரசர்கள், மாவலி வாண தரையர்களது ஆட்சியில் எல்லைகளில் சிறு சிறு மாறுதல் ஏற்பட்டாலும், பொதுவாக மாற்றங்கள் இல்லை.

ஆனால், கி.பி. 1730ல் இந்தப்பெரும் பகுதியின் வடபகுதி, சிவகங்கைச் சீமை அல்லது சின்ன மறவர் சீமை என்றும் தென்பகுதி இராமநாதபுரம் சீமை அல்லது பெரிய மறவர் சீமை என்றும் பிரிவினை பெற்றது. இந்த இரு சீமைகளும் கி.பி. 1772ல் ஆற்காட்டு நவாப்பின் ஆதிக்கத்திற்குள் கொண்டு வரப்பட்டதால் ஆண்டுதோறும் பேஸ் குஷ் தொகையை வசூலிப்பதற்கு முகவர்களாக கும்பினியார் நியமனம் செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கி.பி. 1781, 1785, 1787, 1792ல், ஏற்பட்ட உடன்பாடுகளின் தொடர்பாக கும்பினியார் இந்தப் பகுதிக்கு கலெக்டர்களை நியமனம் செய்தனர். இந்தக் கலெக்டர் மணப்பாறை, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பரந்தமேலாண்மை பகுதியைக் கொண்டிருந்தார். அப்பொழுது இராமநாதபுரம் சீமையில் மன்னராக இருந்த முத்துராமலிங்க சேதுபதி கும்பினியாருக்குக் கட்டுப்படாது சுதந்திரமாக இயங்கி வந்தார். கும்பினியாரின் தலைமை, கி.பி. 1795ல் அவரை பதவியிலிருந்து அகற்றி சிறைப்படுத்திவிட்டு அவர்களே நேரடியாக ஆட்சி செய்தது.

ஆத்திரம் அடைந்த குடிமக்கள் கும்பினியாரை எதிர்த்து ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டனர். கி.பி. 1797 முதல் 1801 வரை, அடுத்தடுத்து எழுந்த இந்த புரட்சிகளை கும்பினியார் நசுக்கி அழித்தனர். பரம்பரை மன்னர் ஆட்சிக்குப் பதிலாக கி.பி. 1803ல் "ஜமீன்தாரி முறை" யையும் ஏற்படுத்தினர். என்றாலும், பொது நிர்வாகம் தொடர்ந்து கும்பினிக் கலெக்டர்கள் கையில் இருந்து வந்தது. மாவட்ட கச்சேரியும், நீதி விசாரணை மன்றமும், இராமநாதபுரத்தில் நிறுவப்பட்டன. இராமநாதபுரம் ஜில்லா கலெக்டராக பாரிஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, திருநெல்வேலி, சீமைப் பகுதிகளும் இவரது அதிகார வரம்பிற்கு உட்பட்டதாக இருந்தது. ஆனால் கி.பி. 1808ல் இந்த முறை நீக்கப்பட்டு மதுரையும் திருநெல்வேலியும் தனி ஜில்லாக்களாக உருவாக்கப்பட்டன. இராமநாதபுரமும் சிவகங்கையும், புதிய மதுரை ஜில்லாவில் இணைக்கப்பட்டன. இந்த அமைப்பு அடுத்த ஒரு நூற்றாண்டு வரை நீடித்தது

கி.பி. 1910ல், இராமநாதபுரம் ஜில்லா என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் இராமநாதபுரம், சிவகங்கை பகுதிகளுடனும், மதுரை ஜில்லாவின் திருப்பத்தூர் வட்டமும், திருநெல்வேலி ஜில்லாவின் சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டங்களும் இணைக்கப்பட்டன. மாவட்டத்தின் தலைநகர் மாவட்டத்திற்கு வெளியே மதுரையில் இருந்து இயங்கியதால், இந்த மாவட்டம் தேசிய வளர்ச்சியில் பின் தங்கி நின்றது. வறட்சிப்பணிகளில் முன்னேற்றமும் மக்கள் நலன்களும் பேணப்பட நிர்வாக அமைப்புக்கள் சிறு பகுதிகளாக இருக்க வேண்டும், என்ற பெருநோக்கில் இந்த ஜில்லா, கி.பி. 1985ல் மூன்று பகுதிகளாக - காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

வரலாறு மீண்டும் திரும்பும் (History Repeats Itself) என்ற ஆன்றோர் வாக்கினுக்குச் சான்றாக, நமது மாவட்டம் வரலாற்றில் மூன்றாவது முறையாக இடம் பெற்றுள்ளது!

மறவர் சீமையின் மகுடம்

மறவர் சீமையின் மகுடமாக விளங்கியது இராமநாதபுரம் கோட்டை. சேதுநாடு என்றும், மறவர் சீமையென்றும் இலக்கியங்களும் வரலாறும் குறிப்பிடுகின்ற கோநகர் இராமநாதபுரம் கோட்டை. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய நாட்டின் மீது படை நடத்தி வந்த இலங்கை தண்டநாயகன் பற்றிய இலங்கை வரலாற்றில், இந்தக் கோட்டை சூரங்கோட்டை என வரையப் பட்டுள்ளது. இன்றும், வருவாய்த்துறைப் பதிவேடுகள் இந்த ஊரை சூரங்கோட்டை என்றே குறித்து வருகிறது. மாமன்னர் கிழவன் சேதுபதி (கி.பி. 1678-1710) யின் ஆட்சியின் மாட்சியில் மறவர் சீமையின் எல்லைகள் வடக்கிலும், வடகிழக்கிலும், சோழ நாட்டிற்குள்ளும் விரிந்த பொழுது, மண் கோட்டையாக விளங்கிய இந்த அரண், கற்கோட்டையாக மாற்றப்பட்டது. இருபத்து ஏழு அடி உயரமும் ஐந்து அடி அகலமும் கொண்ட சுவரையும், ஆழமான அகழியையும் உடையதாக இந்தக் கோட்டையை அமைப்பதில் கீழக்கரை வள்ளல் சீதக்காதி பல்லாற்றானும் சேதுபதி மன்னருக்கு உதவியதாக இராமநாதபுரம் மானுவலில் காணப்படுகிறது.

கும்பெனியாரது ஆவணம் ஒன்று (கி.பி. 1770)ல் இந்தக் கோட்டைச் சுவரில் 44 கொத்தளங்கள் அமைந்து இருந்ததாகவும் அவைகளில் பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும்,கோட்டைக்குள்ளும் ஐம்பது பெங்காலி வகை பீரங்கிகள் இருந்ததாகவும் தெரிவிக்கின்றது. இத்தகைய வலிய கோட்டையைக் கைப்பற்றுவதற்கு சில படையெடுப்புகளும் நடந்தன. கி.பி.1700ல் தஞ்சை அரசர் எக்கோஜியின் பெரும்படை முயன்றது. அதனை மறவர் சீமையின் போர் மறவர்கள் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்தனர். மதுரை நாயக்க அரசின் அரசியல் தலைவியாக இருந்த ராணி மங்கம்மாள் தஞ்சை மன்னரது ஆதரவுடன் மதுரைப் படையை கி.பி. 1702ல் இராமநாதபுரத்திற்கு அனுப்பிவைத்தாள். இராமநாதபுரம் கோட்டைக்கு அருகில் கோட்டை வெளி என்ற இடத்தில் நடந்த பெரும் மோதலில் மன்னர் கிழவன் சேதுபதி, மாற்றார் படையை நிர்மூலம் செய்ததுடன், மதுரை தளவாய் நரசய்யாவையும் கொன்று அழித்தார்.

இருமுறை தோல்வி கண்ட தஞ்சை மன்னர், மூன்றாவது முறையாக கி.பி. 1771ல் பெரும்படையெடுப்பு ஒன்றினை மறவர் சீமைக்குள் நடத்தினார். 50,000 காலாட் படையும் 3,000 குதிரைகளையும் கொண்ட அந்தப் பெரும் அணி இராமநாதபுரம் கோட்டையை இருபது நாட்கள் முற்றுகையிட்டும், விரும்பிய வெற்றியைக் காணமுடியாமல் மிகுந்த பேரழிவிற்குப் பின்னர் தஞ்சை திரும்பியது. இதனைத் தொடர்ந்து, கி.பி. 1772ல், ஆற்காட்டு நவாப்பின்படை, கும்பெனியாரது கூட்டு உதவியுடன் மூன்று நாட்கள் தொடர்ந்து பீரங்கிகளைக் கொண்டு தாக்கியது. கிழக்கு மதிலில் ஏற்பட்ட பிளவின் வழியாக கும்பெனி அணியொன்று கோட்டைக்குள் நுழைந்தது. கோட்டைக்குள் இருந்த மறவர்களில் 2000 பேர் போரில் மடிந்ததுடன் கோட்டையும் வீழ்ந்தது. அந்தக் கோட்டை கண்ட கடைசிப் போர் அது.

பட்டயங்களின் விலை சில காசுகள் - அவைகளில் கண்டுள்ள
செய்திகள் விலை மதிப்பற்றவை

செய்திச்சரம்

இராமநாதபுரம் சீமையின் கிழக்கு கடற்கரையில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு, தமிழகத்தின் வடபகுதியான கொங்கு நாட்டிற்கு அப்பால் கர்நாடகத்திலும் பெரிதும் பயன்படுத்தப்பட்ட விபரத்தை கும்பெனியாரது 200 ஆண்டிற்கு முற்பட்ட ஆவணங்கள் குறித்து வைத்துள்ளன. பொதுவாக செப்டம்பர், நவம்பர் மாதங்களில், மைசூரில் இருந்து, இராமநாதபுரம் சீமைக்கு வந்து உப்பு பொதிகளை வாங்கி 3000 கழுதைகளில் ஏற்றிச் சென்றனர். பருவமழைப் பொழிவில் மாற்றங்கள் இருந்ததால் உப்பு உற்பத்தி குறைந்து, விலை உயர்ந்து இருந்ததாக கி.பி. 1811ம் ஆண்டு ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. தஞ்சைப் பகுதியில் கிடைக்கும் உப்பு விலையில், இராமநாதபுரம் உப்பிற்கு மணங்கிற்கு இரண்டு பணம் கூடுதலாக இருந்தாலும் இராமநாதபுரம் உப்பை கூடுதல் விலையில் வாங்கும் வழக்கம் இருந்ததாககி.பி.1811ம் வருட ஆவணம் ஒன்று தெரிவிக்கிறது.

இந்த உப்பளங்கள் வாலிநோக்கம், மூக்கையூர், தரக்குடி, இராமேசுவரம், ஆத்தாங்கரை, மோர்க்குளம், கொடிக்குளம், குஞ்சாவலசை, சோழியக்குடி, மணக்குடி, உப்பூர், உகந்தான்குடி, முத்துராமலிங்கப் பட்டினம், நம்புதாழை, வட்டாணம், கலியநகரி, தீர்த்தாண்டதானம் ஆகிய ஊர்களில் 32 இடங்களில் அமைந்து இருந்தன.

★ ★ ★

கும்பெனியாரது பிரதிநிதியான மைக்கேல் என்பவர் நாகூரில் இருந்து தேவிபட்டினம் துறையில் 24—1—1793ம் தேதியன்று கரை இறங்கினார். பல்லக்கு ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு இரண்டு வாரங்கள் சேதுபதி சீமையில் சுற்றுப் பயணம் செய்தார். அவரது பயணம் மறவர் சீமை மக்களது பண்பாட்டை, பழக்க வழக்கங்களை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்காக அல்ல என்பதை அவர் 6—2—1793ம் தேதி சென்னையில் உள்ள கும்பெனித் தலைமைக்கு அனுப்பிய இரகசிய அறிக்கை தெரிவிக்கின்றது. கர்நாடகத்தில் உற்பத்தியான கைத்தறித் துணிகளை கும்பெனியார் கொள்முதல் செய்து மேல் நாட்டிற்கு அனுப்பி வந்தனர். ஆனால் மறவர் சீமையின் துணி உற்பத்தியை பெறும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. மாறாக, டச்சுக்காரர்களும், பிரெஞ்சுக்காரரும் மறவர் சீமை துணிகளை வாங்கி அவரவர்கள் நாட்டிற்கு அனுப்பி வந்தனர்.

இந்த நிலையை மாற்றி தங்களது ஏகபோக நிலைமை அங்கு நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புகளை அறிவதற்காகத் தான் மைக்கேல் சேதுபதி சீமைக்குள் நுழைந்தார். இராமநாதபுரம் சீமையில் அப்பொழுது இருந்த 800 தறிகள் விவரம், இவைகளில் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது ஒப்பந்த தறிகளது நிலை, பாம்பன் துறைமுகத்தின் ஏற்றுமதி இறக்குமதி விபரங்கள் அரசியல் சூழ்நிலை ஆகிய விபரங்கள் அந்த அறிக்கையில் பொதிந்து உள்ளன. இந்த அறிக்கையினைப் பெற்ற கும்பெனியார் எந்த வகையிலும் மறவர் சீமை கைத்தறித்துணி உற்பத்தியைப் பெறுவது என முடிவு செய்தனர். அதற்காக, தங்களது வஞ்சகச் செயல்களால் சேதுபதி மன்னரது பாரம்பரிய ஆட்சியைக் கூட புறக்கணித்து, வன்முறையில் மன்னரைப் பதவி நீக்கம் செய்வதற்கும் அவர்கள் தயங்கவில்லை.

செய்திச்சரம் (தொடர்ச்சி)

இராமநாதபுரம் சீமை என்றால் இயற்கை வளம் அற்ற வறட்சிப்பகுதி என்பது கடந்த 300 ஆண்டுகால வரலாற்று ஆவணங்கள் சொல்லுகின்ற செய்தியாகும். இங்கே வானம் பொழிகின்ற குறைந்த மழைவளத்தையும் வையை வழங்குகின்ற சுருங்கிய நீரையும் கொண்டு ஆறுமாத சாகுபடி-யாகக் கூட நெல்வகைகளை வெற்றிகரமாக இந்தப் பகுதி மக்கள் விளைவித்து வந்தனர் என்பதை இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆவணங்கள் தெரிவிக்கும் செய்தி வியப்பை அளிக்கின்றது. அப்பொழுது விளைவிக்கப்பட்ட நெல் வகைகள் இதோ கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

நெல் வகை: (ஆறு மாத விளைச்சல்)

செம்மிளகி	(உயர்ரகம்)
சரப்பளி சம்பா	,,
ஈக்கி சம்பா	,,
கருடன் சம்பா	,,
சிறுமணியன்	,,
வரகு சம்பா	,,
கோடை	,,
வெள்ளிக்கோட்டை	,,
தில்லைநாயகம்	,,
ஈரங்கால், அரிசிறகி	(மட்டரகம்)
அரியான், குலவளை	,,

ஐந்து மாத விளைச்சல்:

வெள்ளைமிளகி, பாலுக்கினியன்	(உயர்ரகம்)
சௌரி சம்பா, கொம்பன் சம்பா	,,
சிறகி சம்பா	,,
மாப்பிள்ளைச் சம்பா	,,
கித்தாரம்	,,

நான்கு மாத விளைச்சல்:

சித்திரைக்கார், குழிப்பிக்கார்	(மட்டரகம்)
கறுத்தக்கார், உருண்டைக்கார்,	,,
கல் மணல்வாரி, மணல்வாரி	,,
பனைமுகாரி, முருங்கன்	,,
நரியன், வெள்ளை மணல்வாரி	,,

மூன்று மாத விளைச்சல்:

வெள்ளைக்குறுவை	(மட்டரகம்)
மொட்டைக்குறுவை	,,
கறுத்தக்குறுவை, செங்கணி	,,

★ ★ ★

இந்தியத் திருநாடெங்கும் பயபக்தியுடன் படித்துச் சுவைக்கப்படுகிற பெருங்காவியம் இராமாயணம். அதன் இறுதிக்களத்தினை என்-றென்றும் நினைவுகூறச் செய்யும் திருத்தலம் இராமேசுவரம். "………அன்பு கொண்டு தேடிமால் செய்த கோயில்" அங்கு தான் இருக்கிறது. "கங்கை-யினும் புனிதமாகப்" போற்றப் படுகிற அக்கினி தீர்த்தமும் அங்கு தான் உள்ளது. அவைகளைப் பேணிக் காப்பதற்கென்றே வாழ்ந்த சேதுபதி மன்னர்களது புகழிடமாகக் காட்சியளிக்கும் கோயில் திருப்பணிகளும் அங்கு தான் நிறைவேறியுள்ளன.

கடந்த பல நூற்றாண்டுகளாக நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக ஆண்டுதோறும், விழைந்து வருகை தருகிற ஒற்றுமைப்பாட்டுத் திருத்தலம் இது தான். கடல் அலையைக் கணக்கிடுவது இயலாத ஒன்று. அதே போல அங்கு வருகை தந்த மக்களது எண்ணிக்கை-யையும் அளவிட்டு வரைவது அரிதான ஒன்று. என்றாலும் அவர்களில் சிலரை வரலாறு இனங்-காட்டியுள்ளது. இதோ அவர்களது பட்டியல்:

பழங்கால நாணயங்கள் செல்லாதவை - அவைகளின் தோற்றம் சுவையானவை.

செய்திச்சரம் (தொடர்ச்சி)

1. திருஞானசம்பந்தரும், அப்பர் அடிகளும் இராமேசுவரம் இராமநாதசுவாமியை தரிசித்து தேவாரம் பாடியது .. ஏழாம் நூற்றாண்டு
2. சாளுக்கியப் பேரரசின் மூன்றாவது கிருஷ்ணா சேதுமூலத்தில் வெற்றித்தம்பம் நாட்டி, கண்ட மார்த்தாண்ட ஆதித்தீஸ்வர ஆலயம் அமைத்தது. ...கி.பி. 910
3. இலங்கை மன்னன் பராக்கிரம பாகுலின் தண்டநாயகன் இராமேசுவர தரிசனம் 1169
4. இலங்கை மன்னன் நிசங்கமல்லனது வருகையும் திருப்பணியும் 1190
5. ஹொய்சாள மன்னர் வீர பல்லாளா III துவாரசமுத்திரத்திலிருந்து இராமேசுவரம் வந்தது 1342
6. விஜயநகரப் பேரரசர் ஹரிஹரனது மகன் விருபாட்சா I துலாபாரதானம் செய்தது 1379
7. விஜயநகர ஆளுநர் கோபதிப்பரது வருகை 1408
8. விஜயநகர பேரரசர் நரசிம்மா வருகை 1497
9. விஜயநகர ஆளுநர் நரசநாயக்கர் வருகை 1500
10. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர் தமது இரு மனைவிகளுடன் வந்து மூன்று நாட்கள் தங்கி, சகல தருமங்களையும் செய்தது 1517
11. விஜயநகரப் பேரரசரது ஆளுநர் சளுக்க ராஜ திம்மா வருகை 1531
12. விஜயநகரப்பேரரசர் அச்சுதராயர் வருகை 1532
13. தஞ்சை மன்னர் செவப்ப நாயக்கர் வருகை 1583
14. மதுரை மன்னர் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரது ராஜகுரு தலயாத்திரை 1604
15. மதுரை மன்னர் திருமலைநாயக்கர் தளவாய் இராமப்பையன் வருகை 1638
16. தஞ்சை மன்னர் விஜயராகவ நாயக்கர் துலாபார தானம் செய்தது 1659
17. மகாராஷ்டிர மன்னர் சத்ரபதி சிவாஜி தலயாத்திரை 1677
18. தஞ்சை மன்னர் பிரதாப சிம்மன் வருகை 1759
19. தஞ்சை மன்னர் துல்சாஜி வருகை 1779
20. தஞ்சை மன்னர் அமீர் சிங் வருகை 1795
21. பாஞ்சாலங்குறிச்சிகட்டபொம்மன்வருகை 1795
22. கும்பெனி கவர்னர் ஹோபர்ட் சென்னையில் இருந்து வருகை 1798
23. ஆந்திர மாநில சிந்தப்பள்ளி ஜமீன்தாரும் தஞ்சை மன்னர் சரபோஜியும் வருகை 1802
24. தஞ்சை மன்னர் சரபோஜி II வருகை 1822
25. திருவாங்கூர் மன்னர் சுவாதித் திருநாள் வருகை 1893
26. சுவாமி நரேந்திரர் (விவேகானந்தர்) வருகை 1893
27. சிருங்கேரி ஜகத்குரு சச்சிதானந்த சுவாமி நரசிம்ம பாரதி வருகை 1894
28. சுவாமி விவேகானந்தர் அமெரிக்க அனைத்து சமய பேரவையில் கலந்து கொண்டு திரும்பும் வழியில் வருகை 1897
29. பரமயோகி ராமகிருஷ்ண பரமஹம்ஸரது துணைவி சாரதா தேவி வருகை 1911
30. சென்னை கவர்னர் இர்வின் வருகை 1914
31. நேப்பாள அரசியும் இலங்கை கண்டி அரச குடும்பத்தினரும் வருகை 1925
32. சிருங்கேரி ஜகத்குரு சந்திரசேகர பாரதி சுவாமிகளும் மைசூர் மன்னரும் வருகை 1940
33. ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் வருகை 1950
34. சிருங்கேரி ஜகத்குரு வித்யாத்வித சுவாமி வருகை 1957
35. ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் வருகை 1963
36. திபெத் நாட்டு தலைவர் தலாய்லாமா வருகை 1965
37. இந்தியப்பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி வருகை 1966
38. நேப்பாள மன்னர் பிரேந்திரா வருகை 1970
39 ஜனாதிபதி வி.வி. கிரியும் காஷ்மீர் மன்னரும் வருகை 1973
40. சென்னை கவர்னர் கே.கே. ஷா வருகை 1974
41. சிருங்கேரி ஜகத்குரு வருகை 1975
42. இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி வருகை 1976
43. இந்திய ஜனாதிபதி கியானி ஜெயில் சிங் வருகை 1987
44. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி வருகை 1988

மண்ணுக்குள் இருந்து கண்டு எடுத்த பொருட்களை மறைத்து விடாதீர்.

தங்கையை தானம் வழங்கிய தமையன்

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராமநாதபுரத்திற்கு கிழக்கேயுள்ள வேலான்தரவை கிராமத்தில் வலையர்கள் அமைதியாக வாழ்ந்து வந்தனர். காட்டில் விலங்குகளையும் கடலில் மீன்களையும் வளைத்துப்பிடிக்கும் வலையர்களில் வீரமூப்பன் என்பவர் இருந்தார். அவரது மகள் வீராயி என்ற கன்னி - இளமநேரி - நைனுக்குட்டி சேர்வைக்காரனுடன் களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டு கர்ப்பவதி ஆனாள். இதனை அறிந்த அவரது பெற்றோரும் சுற்றத்தாரும் அவளைக் கண்டித்து தண்டித்ததில் அவள் உயிர்வதை ஆகிவிட்டாள். நைனுக்குட்டி சேர்வைக்காரனை அவர்கள் இராமநாதபுரம் சேதுபதி மன்னரிடம் கொண்டு நிறுத்தி பலிக்குப்பலி கொடுக்கக் கோரினார்கள்.

வலையரின் அந்தக் கோரிக்கை நியாயத்தை மன்னரும் விளங்கி நைனுக்குட்டி சேர்வைக்காரனை பலிக்குப்பலி கொடுக்குமாறு உத்தரவிட்டார். அதன்படி நைனுக்குட்டி சேர்வைக்காரன் தங்கை உடையக்காளை ஒரு சிதையிலும், இறந்துபோன வீராயி உடலை இன்னொரு சிதையிலும் வைத்து நெருப்பு மூட்டினர். ஆனால், நெருப்பின் நாக்கு நீண்டு வளர்ந்த பொழுது, அவர்களது நெஞ்சங்களில் ஒரு அப்பாவிப் பெண்ணை கொல்லுகின்ற நியாய உணர்வும் அனுதாபமும் நிறைந்தது. உடனே அவர்கள் தங்களது வெறித்தனத்தை நிறுத்தி உடையக்காளை சிதையிலிருந்து எடுத்து தங்களது சாதிக்கு பிள்ளை வந்ததாக மகிழ்ச்சி அடைந்து வலையர்களின் மூத்த தலைவர்களான மூப்பன்மார்கள் பலி சாதனபட்டயம் ஒன்றை வரைந்து கொடுத்தனர். கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் இருபத்தைந்து ஊர்களில்வாழ்ந்துவந்த எட்டுகிளைகளைச் சேர்ந்த மூப்பன்மார்கள் இந்தப்பட்டயத்தில் கைச்சாத்திட்டு ஒப்புதல் கொடுத்துள்ளனர்.

இதன்படி சாதிப் பிள்ளைக்கு வலையரில் கலியாணத்துக்கு ஏழு பணமும், ஐம்பது பாக்கும், குறுணி அரிசியும், ஒரு கிடாயும், கட்டுத்தாலிக்கு ஐந்து பணம், முப்பது பாக்கு, மூன்றுபடி அரிசி, ஒரு கிடாயும், சடங்கிற்கு மூன்று பணம், பதினைந்து பாக்கு,மூன்றுபடி அரிசி,ஒருகோழியும் கொடுக்கிறது என்றும், வலையர்குடி ஒன்று வருஷக்கட்டளையாக இரண்டுபணம் மூன்றுபடி தவசமும் கைம்பொண்குடி ஒரு பணமும், ஒருபடி தவசமும்-வலையரில் பிள்ளை இல்லாமலோ, உரிமைக்காரர் இல்லாமலோ மரணம் ஆனால் சாதிப் பிள்ளை முன் கை சிரைத்து கருமம் பண்ணுகிறது என்றும், இறந்தவர்கள் சொத்துக்கள் சாதிப்பிள்ளைக்கு சேரும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

(இந்தப் பட்டயம் கி.பி. 1692ல் வரையப்பட்டிருப்பதை வரலாற்று ஆசிரியர் டாக்டர் எஸ்.எம். கமால் அவர்கள் கண்டுபிடித்து இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று ஆவணக் குழுவினரிடம் ஒப்படைத்துள்ளார்.)

★ ★ ★ ★

வள்ளல் சீதக்காதியும் இராமநாதபுரமும்:

என்றும் உள்ள தென்தமிழின் இலக்கியங்களில் இன்றும் வாழ்பவர் வள்ளல் சீதக்காதி. வள்ளலாக, பெரும் வணிகராக மட்டும் அல்லாமல் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது அருவினை ஆற்றும் அமைச்சராகவும் விளங்கினார் என்பது வரலாறு. அவரது பணிக்காலத்தில் தான் கொள்ளுதற்கரிய இராமநாதபுரம் கோட்டை (கி.பி. 1678-80)யும் அரண்மனையும் அமைக்கப்பட்டன. மேலும் அவர் தங்கி வாழ்வதற்கென அவருக்கு இராமநாதபுரத்தில் "புது அரண்மனை"யும் இருந்தது.

பேசும் கல்லறை

கும்பினியார் ஆட்சியில், பணிபுரிந்த பரங்கிகள் சிலரும் அவர்களது குடும்பத்தினரும் இறந்து அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் நமது நாடு முழுவதும் உள்ளன. அந்தக் கல்லறைகளின் மீது, அடக்கம் பெற்றுள்ளவரது பிறப்பு, பணி, சாதனை, இறப்பு பற்றிய விபரங்கள் கொண்ட வாசகத்தைக் பொறித்துள்ளனர். கடந்து சென்ற காலத்தை பெருமையுடன் பேசுவதாக அவை அமைந்துள்ளன. ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழகம், ஆகிய மாநிலங்களில் எந்தெந்த ஊர்களில் அந்தக்கல்லறைகள் இருக்கின்றன என்ற விபரங்களை சுமார் எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தொகுத்து ஒரு தொகுதியாக அப்பொழுது இருந்த ஆங்கில அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இறந்தாரை என்றும் மறந்தாரில்லை!

அந்த நூலில், நமது மாவட்டத்தில், இராமநாதபுரம், பாம்பன் ஆகிய ஊர்களில் அத்தகைய கல்லறைகள் இருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக அந்தக் கல்லறைகளின் வாசகங்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் மொழிகளில் வரையப்பட்டிருந்த போதிலும், இராமநாதபுரம் நகரில் உள்ள ஒரே ஒரு பளிங்குக் கல்லறையில் அழகுத் தமிழும், ஆங்கிலமும் பயன்படுத்தப்பட்டு உள்ளன. செந்தமிழ் வளர்த்த சேது நாட்டின் சீரிய மரபை பின் பற்றுவதாக மட்டுமல்லாமல், ஆங்கிலேயராகப் பிறந்தாலும் தமிழராக வாழ்ந்து, தமிழ்ப் பணியில் உயிர் துறந்த பேரறிஞர் எப்.டபுள்யூ. எல்லிஸ் என்ற தமிழ் புலவரின் பெருமை பேசும் கல்லறையாகவும் அந்த நினைவுச் சின்னம் விளங்கி வருகிறது.

இதோ அந்தக் கல்லறை பேசுகிறது:

"மிக்கபுகழ் மணந்து விரிந்து தழைந்து திக்கனைத்தும் பரந்திடும் இங்கிலீஸ் குலப்பூக்கொடிக்கு ஒரு கொழுமலர் ஒப்போன், கல்வியறிவிலா காரிருள் இரிய, செல்வச் சங்க செழுங்கதிர் விரித்து, அருள் எல்லிஸ் என்னும் இயற்பெயர் உடையோன், இத்தேயத்தில் இயன்றா பல சொற்களில், முத்தமிழ் ஆரிய முதற்பல கசடறக் கற்றறிந்தவற்றுள் கலை பல உணர்ந்தோன். புத்தமிழ்தெனத் தமிழ்மொழி, திருவாக்கினன், மனுமுதல் நூல்களில் வழக்கு நெறியனைத்தும் இனமுற தொகுத்து இங்கிலீஸில் விரித்தோன், திருவள்ளுவப் பெயரத் தெய்வம் செப்பி, அருள் குறள்நூல்உற பாலினுக்க, தங்குபல நூல் உதாரணக் கடலைப் பெய, இங்கிலீஸில் தனில், இணங்க மொழிபெயர்த்தோன், இந்நிலக் குடிமையும் இறைமையும், உணர்த்தேன்மை செய்க பொறி சொற் செப்பேடு நன்னர் ஆய்ந்தவற்றையும், நன்கு மொழிபெயர்த்தோன். புரைசைவெற்கடம் புக்கவோர் காலத்து அரசுபுரி சென்னையில் ஆங்காங்கு இருபத்து ஏழ் கூவல்களோடரக் குளமும் தொட்டோன். இளையபெரும் குணமுடையோன், தென் திசை யாத்திரை செய்வழி முகவையில் சாலிவாகன சகம் ஆயிரத்து எழுநூற்று நாற்பத்தி ஒன்றினுக்கு கிறிஸ்துவின் ஆயிரத்து எண்ணூற்றுப் பத்தொன்பதாம் ஆண்டில், ஏய மார்ச்சி என்பதினில் சடிதியில் அந்தோ நிலமகள் அழுது தலை விரிக்க, அறம் முதறகடவுள் அடிப் பெருநிழல் பெற்றுறு இளைப்பாறி உவகை உற்றனனனே."

இந்தக் கல்லறை, இராமநாதபுரம் நகர் எஸ்.பி.ஜீ. சர்ச் வளாகத்தில் அமைந்துள்ளது.

This News letter (Seithi Malar - Tamil) is published by the Chairman of Ramanathapuram District Archives Committee, Thiru. Ara. Chellamuthu, I.A.S., District Collector, Ramanathapuram.

Editor: Dr. Thiru. S.M. Kamal, District Archives Committee, Ramanathapuram.

Printed at: SARASWATHI PRESS, RAMNAD.